<u>2026 பிப்ரவரி மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>O.S. நெம்பர் : 7/2016</u>

<u>2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை 15ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்</u>

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | DW1 – அழகேசன் |
| தந்தை பெயர்: | அழகர்சாமி |
| ஊர்: | மேலசொக்கநாதபுரம் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 56 |

13.02.2026

**<u>(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).</u>**
**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை</u>**–

நான் இந்த வழக்கில் 15ம் பிரதிவாதியாவேன். தனக்காகவும், 16 முதல் 19, 22 முதல் 24, 26, 30, 33, 34 பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சர்வே எண்.393/3 வில்லங்கச் சான்று | **பி.வா.சா.ஆ.2** | ஒளிப்பதிவு நகல் |
| 2. | 03.07.1995ம் தேதியிட்ட 18ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.2566/1995) | **பி.வா.சா.ஆ.3** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |

| | | | |
|---|---|---|---|
| 3. | 26.08.1996ம் தேதியிட்ட 19ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.2044/1996) | **பி.வா.சா.ஆ.4** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |
| 4. | 14.07.1997ம் தேதியிட்ட 22ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.2691/1997) | **பி.வா.சா.ஆ.5** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |
| 5. | 14.07.1997ம் தேதியிட்ட 23ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.2692/1997) | **பி.வா.சா.ஆ.6** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |
| 6. | 04.09.1998ம் தேதியிட்ட 24ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.2688/1998) | **பி.வா.சா.ஆ.7** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |
| 7. | 01.03.2002ம் தேதியிட்ட 26ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் (எண்.574/2002) | **பி.வா.சா.ஆ.8** | சார்பதிவாளர் கணினிவழி நகல் |

பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் சார்பதிவாளர் கணினிவழி நகல் தாக்கல் செய்துள்ளதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**வாதி, மற்றும் 10, 28ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:– வாதி மற்றும் 10, 28ம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.02.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.13 18:17:08 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.02.2026.